# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8102043

1. District : மதுரை / மாவட்டம்    PS: இலா.த.க.பிரிவு / காவல்நிலையம்    Year: / ஆண்டு    FIR No.: 5/18 / மு.த.அ. எண்    Date: 26.02.2[018] / நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act 1988    Sections பிரிவுகள்: 7 of PC Act
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள்    Date from : – / நாள் முதல்    Date to : 24.02.2018 / நாள் வரை
   Time Period : – / நேர அளவு    Time from : – / நேரம் முதல்    Time to : / நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 24.02.2018 / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : 12.30 hrs / நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 24.02.2018 / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 26.02.2018    Time : 12.30 hrs / நேரம் 07.15 hrs

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்து மூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — சுமார் 1 கி.மீ தென் கிழக்கு
   Beat Number : – / முறைக் காவல் எண்    (b) Address : / முகவரி — மதுரை உள்ளூர் திட்டக்குழுமம் மாநகராட்சி அலுவலக வளாகம், அறிஞர் அண்ணா மாளிகை, மதுரை-2.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : N. காசிநாத் / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்    (b) Father's/ Husband's Name : நரோத்தம் / தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : 05.07.1971 / நாள் / பிறந்த ஆண்டு    (d) Nationality : இந்தியன் / நாட்டினம்    (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள்    Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Builders / தொழில்    (g) Address : / முகவரி — கதவு எண். A7, சிவசுப்பிரமணியன் தெரு, திருநகர், மதுரை 625 006.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. S. டைட்டஸ், மேற்பார்வையாளர் மற்றும் வரைவாளர் நிலை, மதுரை உள்ளூர் திட்டக் குழுமம், மாநகராட்சி அலுவலக வளாக 3ம் தளம், அண்ணா மாளிகை, மதுரை-2

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   P.E. 56/2018/TCP/MD நாள். 24.02.2018-ன் படி முதல் கட்ட விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed T. A. Kannan Rank Inspector..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS V4 AC ................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/02/18

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

26.02.2018 at 09.00 hrs

Name: பெயர் V. Hemalatha
Rank: நிலை Inspector of Police, No. எண் ........
V4 AC, Madurai

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p 2

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :</u>

மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி. வீ.ஹேமலதா ஆகிய நான், 24.02.2018-ம் தேதி 12.30 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, கதவு எண். A7, சிவசுப்ரமணியன் தெரு, மதுரை, திருநகர் என்ற முகவரியில் குடியிருக்கும் N.காசிநாத் த/பெ நரோத்தம் என்பவர் கொடுத்த புகார் மனுவை பெற்று அதனை மின்னஞ்சல் மூலம், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குனர் அலுவலகத்திற்கு அனுப்பி உத்தரவு பெற்று PE.56/2018/TCP/MU dt: 24.02.2018–ன்படி முதற்கட்ட விசாரணை மேற்கொண்டேன். முதற்கட்ட விசாரணையில் மதுரை மாநகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள உள்ளூர் திட்டக்குழுமத்தில் மேற்பார்வையாளர் மற்றும் வரைவாளராக பணிபுரியும் திரு.டைட்டஸ் என்பவரை புகார்தாரர் திரு.காசிநாத் அவர்கள் கடந்த 24.02.2018-ம் தேதியன்று, சனிக்கிழமை மீண்டும் அவரது பணியாளர் திரு.சங்கர் என்ற சங்கையாவுடன் நேரில் சென்று சந்தித்து லே-அவுட் அப்ரூவல் கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு பணம் ரூ.50,000/- கேட்டதை குறைக்குமாறு கேட்க, திரு.டைட்டஸ் ஏற்கனவே தான் கேட்ட தொகையைக் குறைத்து ரூ.40,000/- கையூட்டாக கேட்டதால், குற்றம் புரிந்ததற்கான முகாந்திரம் இருப்பது முதனிலை விசாரணையில் தெரிய வந்தது.

ஆகையால், புகார்தாரரின் புகார் மனுவின்பேரில் வழக்கு பதிவு செய்ய காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் அனுமதி பெற்று இன்று 26.02.2018-ம் தேதி 07.15 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2018 பிரிவு 7 ஊ.த.சட்டம் 1988-ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, அனுப்புநர், N.காசிநாத், த/பெ நரோத்தம், கதவு எண் A7, சிவசுப்பிரமணியன் தெரு, திருநகர், மதுரை. பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை திருநகரில் குடும்பத்துடன் வசிக்கிறேன். நான் திருநகர் 4-வது பஸ் ஸ்டாப் அருகில் D-69, பாலுசாமி தெரு என்ற முகவரியில் மோனிகா அவென்யூ என்ற பெயரில் புதிய வீடு கட்டி விற்பனை செய்யும் கட்டுமான நிறுவனம் வைத்து நடத்தி வருகிறேன். மதுரை திருப்பரங்குன்றம் வட்டம், தனக்கன்குளம் கிராமம் சர்வே எண் 210/1A4-ல் உள்ள வெங்கடேஸ்வரா நகரில் எனது பெயரில் 3 பிளாட்டுகள் உள்ளன. அவற்றுள் பிளாட் எண் 37-ல் புதியதாக வீடு கட்டி விற்பனை செய்யத் திட்டமிட்டு, அரசு உத்தரவின்படி வெங்கடேஸ்வரா நகர் லே-அவுட் அப்ரூவலுக்காக மதுரை நகர் ஊரமைப்புத் துறையின் கீழ் மதுரை மாநகராட்சி அலுவலகத்தில் செயல்படும் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்தில் கடந்த 30.11.2017-ம் தேதியன்று ஆன்லைன் மூலம் அரசு கட்டணமாக ரூ.500/- செலுத்தி விண்ணப்பித்தேன். அதற்கான ஆன்லைன் ரெஜிஸ்ட்ரேசன் எண் DTCP/P0032670/2017, நாள் 30.11.2017 ஆகும். மேலும், அடுத்த நாள் 01.12.2017-ம் தேியன்று மதுரை

மாநகராட்சி அலுவலகத்தில் செயல்படும் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்திற்கு நேரில் சென்று உறுப்பினர் செயலர் திரு.வேல்முருகன் அவர்களை சந்தித்து பிளாட் எண் 37-க்குரிய சொத்துப் பத்திரம், லே-அவுட், FMB மேப், வில்லங்கச் சான்று, பட்டா நகல், அ.பதிவேடு நகல், அணுகு சாலைக்கான இனாம் சாசனம், லே-அவுட்டின் சி.டி., Location மேப் ஆகியவற்றின் நகல்களை கொடுத்த போது அவர் சம்மந்தப்பட்ட பிரிவில் பணியாற்றும் மேற்பார்வையாளர் மற்றும் வரைவாளர் திரு.டைட்டஸ் என்பவரிடம் அவற்றைக் கொடுக்கச் சொன்னார். திரு.டைட்டஸ் அனைத்து ஆவணங்களையும் சரிபார்த்து வாங்கிய பின்னர், 20 நாட்கள் கழித்து நேரில் வந்து பாருங்கள் என்று கூறி அனுப்பினார். அவர் சொன்னபடியே 20 நாட்கள் கழித்து நானும் என்னிடம் பணியாற்றும் திரு.சங்கர் என்ற சங்கையாவும் நேரில் சென்று திரு.டைட்டஸ் அவர்களைச் சந்தித்த போது, வேலை இன்னும் முடியவில்லை, ஒரு வாரம் கழித்து வந்து பாருங்கள் என்று கூறினார். மீண்டும் ஒரு வாரம் கழித்து திரு.டைட்டஸை நேரில் சென்று பார்த்த போது 10 நாட்கள் கழித்து வாருங்கள், பார்க்கலாம் என்று கூறி அனுப்பினார். இந்நிலையில், கடந்த ஜனவரி மாதம் முதல் வாரத்தில் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்திலிருந்து எனது வீட்டின் முகவரிக்கு அனுப்பிய கடிதத்தில் தனக்கன்குளம் கிராமம் சர்வே எண் 206-க்கான FMB வரைபடம், அணுகுசாலைக்கான FMB வரைபடம் மற்றும் அ.பதிவேடு ஆகியவை விடுபட்டுள்ளதாகவும், அவற்றை கொடுக்குமாறும் கூறப்பட்டிருந்தது. எனவே, பொங்கல் விடுமுறை முடிந்த பின்னர், நானும் சங்கரும் நேரில் சென்று திரு.டைட்டஸிடம், எனது பிளாட் அமைந்துள்ள சர்வே எண் 210 என்றும், அதற்கும் சர்வே எண் 206-க்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றும், மற்ற ஆவணங்களை ஏற்கனவே கொடுத்துள்ள விவரங்களைக் கூறினேன். அந்த விவரங்களை அவர் சொன்னபடியே சங்கர் எனது பெயரில் எழுதிக் கொடுத்தார். ஆனாலும், எனது பிளாட்டுக்குரிய லே-அவுட்டை அப்ரூவல் செய்யாத காரணத்தால் கடந்த 22.02.2018-ம் தேதியன்று மாலை திரு.டைட்டஸை அவரது அலுவலகத்தில், எனது பணியாளர் திரு.சங்கர் நேரில் சந்தித்து கேட்ட போது, அவரிடம் திரு.டைட்டஸ் வழக்கமாக ஒவ்வொரு பிளாட் அப்ரூவலுக்கும் ஒரு லட்சம் ரூபாய் வாங்குகிறோம், எனவே, நீங்கள் உங்கள் ஓனரை சனிக்கிழமை நேரில் வரச்சொல்லுங்கள் அவரிடம் பேசிக்கொள்ளலாம் என்று கூறிவிட்டதாக சங்கர் என்னிடம் கூறினார். எனவே, நானும், சங்கரும் இன்று 24.02.2018-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில் திரு.டைட்டஸை அவரது அலுவலகத்தில் நேரில் சந்தித்து பேசிய போது அவர் என்னிடம் எல்லாம் சரியாக உள்ளது, பணம் கொடுத்தால் வேலை முடிந்து விடும் என்று கூறினார். மேலும், ஒரு பிளாட்டுக்கு வழக்கமாக ஒரு லட்சம் வாங்குகிறோம் என்றார். நான் அவரிடம், இப்போது ஒரு பிளாட்டுக்குத்தான் லே-அவுட் அப்ரூவல் கேட்கிறேன், நீங்கள் அதிமாக பணம் கேட்கிறீர்களே என்று சொன்னவுடன், அவர் உங்களுக்காக பணத்தைக் குறைத்துக் கொள்கிறேன், ரூ.50,000/- கொடுத்தால் போதும், உடனே பைலை ரெடி செய்து மேலே அனுப்பி விடுகிறேன் என்று கூறினார். மேலும், பணம் கொடுக்காவிட்டால் இன்னும் 3 மாதம் ஆனாலும் லே-அவுட் அப்ரூவல்

ஆகாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். ஆனால், அரசு உத்தரவின்படி லே-அவுட்டை முறைப்படுத்த பணம் கொடுப்பதற்கு எனக்கு விருப்பமில்லை. எனவே, எனது பிளாட்டை லே-அவுட் அப்ரூவல் செய்வதற்கான பைலை ரெடி செய்து அனுப்புவதற்கு ரூ.50,000/- லஞ்சமாகக் கேட்கும் திரு.டைட்டஸ், மேற்பார்வையாளர் மற்றும் வரைவாளர், உள்ளூர் திட்டக் குழுமம், மாநகராட்சி அலுவலகம், மதுரை என்பவர் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்க வேண்டுமாறு பணிவுடன் வேண்டுகிறேன். இத்துடன் நான் ஆன்லைன் மூலம் விண்ணப்பித்த ஆன்லைன் ரசீது, நாள் 30.11.2017 மற்றும் ந.க. எண் 2877/2017/மதி2, நாள் 02.01.2018-ன் கீழ் உள்ளூர் திட்டக் குழும அலுவலகத்திலிருந்து கிடைக்கப் பெற்ற கடிதம் ஆகியவற்றின் நகல்களையும் இணைத்துள்ளேன். தங்கள் உண்மையுள்ள (Sd. xxxx) காசிநாத் 24.02.2018. சாட்சி (Sd. xxxx) சங்கர் என்ற சங்கையா Sir, received this complaint on 24.02.2018 at 15.00 hrs. and the copy of the same was forwarded to the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai for necessary orders (sd. ) V.Hemalatha, Inspector of Police, V&AC, Madurai, 24.02.2018. Sir, As per the Order of the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-corruption, Chennai vide Memorandum in PE No.56/2018/TCP//Mu dated 24.02.2018, a Preliminary Enquiry was registered and conducted. Since Prima Facie is made out and after getting concurrence from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Madurai V&AC Cr.No. 5/2018 U/s 7 of PC Act 1988 was registered on 26.02.2018 at 07.15 hrs against Tr.Titus, Supervisor cum Draughtsman Grade-II, Local Planning Authority, Madurai Corporation Building, 3rd Flore, Madurai. (sd.) V.Hemalatha, Inspector of Police, V&AC, Madurai, 26.02.2018. இதன் அசலையும், வாதியின் புகார் மனுவையும் இணைத்து மதுரை, மாண்புமிகு சிறப்பு நீதிமன்ற நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகள், அவர்களுக்கும் நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

V. He... 26.02.18
(V. HEMALATHA)
Inspector V&AC
Madurai.